இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 29-11-2025

# தலைமை நீதிபதி சொல்லிய நீதிகள்!

இந்தியாவின் 52 ஆவது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பொறுப்புவகித்து, கடந்த நவம்பர் 23 ஆம் தேதி ஓய்வு பெற்றுள்ளார் மாண்பமை பி.ஆர்.கவாய் அவர்கள். அவர் தனது பணிக் காலத்தில் இந்திய நாட்டுக்கு நல்ல பல நீதிகளைச் சொல்லிச் சென்றிருக்கிறார்.

தலைமை நீதிபதிக்கு இதுவரை வரலாற்றில் இல்லாத வகையில் அவமானம் இழைக்கப்பட்டது. நீதியரசர் கவாய் மீது டெல்லி வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர் (71) என்பவர், கடந்த மாதம் காலணியை வீசினார். "சனாதன தர்மத்தை அவமதிப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாது" என தொடர்ந்து கத்திக் கூச்சல் போட்டுள்ளார் அந்த வழக்கறிஞர். அவர் மீதும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. கேட்டால், 'அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று தலைமை நீதிபதியே சொல்லிவிட்டார்' என்கிறார்கள். நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்பது அவரது பெருந்தன்மையாக இருக்கலாம். ஆனால், தலைமை நீதிபதியின் மாண்பைக் காக்க வேண்டியது ஒன்றிய அரசின் பொறுப்பு அல்லவா? அதைக் கூடச் செய்யவில்லை.

"அரசுக்கு எதிரான வழக்கை என் தலைமையிலான அமர்வு விசாரிப்பதை ஒன்றிய அரசு விரும்பவில்லை" என்று வெளிப்படையாக தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் குற்றஞ்சாட்டினார். பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் சேவைக்கான நிபந்தனைகளை (uniform Service Conditions) ஒரே மாதிரியாக்கும் தீர்ப்பாய புனரமைப்புச் சட்ட விவகாரம் தொடர்பாக ஒன்றிய அரசுக்கு எதிராக பல்வேறு மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மற்றும் நீதிபதி வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரிக்கப்பட்டு வரும்போதே, '5 நீதிபதிகள் அமர்வு விசாரிக்க வேண்டும்' என்று ஒன்றிய அரசின் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனைத் தள்ளுபடி செய்தார் தலைமை நீதிபதி கவாய்.

**"அரசுக்கு, எதிரான வழக்கை எனது அமர்வு விசாரிப்பதை மத்திய அரசு விரும்பவில்லை என்று நினைக்கிறேன். விரைவில் நான் ஓய்வு பெறப்போவதால் மத்திய அரசு இப்படியான செயலை எடுத்து இருக்கலாம்." என்று வெளிப்படையாக தலைமை நீதிபதி வருந்தினார்.**

இத்தகைய சூழலில்தான் அவர் தலைமை நீதிபதி பொறுப்பை வகித்தார். இருப்பினும் அவர் வழங்கிய பல வழிகாட்டுதல்கள் முக்கியமானவை.

1. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலச் சட்டமன்றங்களின் உரிமையை நிலைநாட்டியது மாண்பமை தலைமை நீதிபதி கவாய் அமர்வு. "சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை ஆளுநர் நிறுத்திவைப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது" என்று தீர்ப்பளித்தார்.

"மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும், குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம், சட்டப்பேரவைக்குத் திருப்பி அனுப்பலாம். இந்த மூன்றில் ஒன்றைத்தான் ஆளுநர் தேர்ந்தெடுக்க முடியுமே தவிர, ஒன்றிய அரசு கூறுவதுபோல் நான்காவதாக எந்த வாய்ப்பும் இல்லை. அரசியல் சாசனப்பிரிவு 200, 201-ன் படி மசோதாக்களுக்கு ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்க வேண்டும். இல்லையெனில் சட்டப்பேரவைக்கு மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்ப வேண்டும். மசோதாக்கள்மீது முடிவெடுக்காமல் காலவரம்பின்றிக் கிடப்பில் வைக்க ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே அதிகாரம் இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், அதன் அமைச்சரவையுமே முதன்மையான இடத்தில் இருக்கின்றன. மசோதாக்கள் விவகாரத்தில் இடையூறு விளைவிக்கும் அணுகுமுறையை ஆளுநர்கள் மேற்கொள்ளக் கூடாது. ஆளுநர் செயல்படாமல் இருந்தால் அரசியல் அமைப்பு, நீதிமன்றங்கள் அதனை ஆய்வு செய்யும். அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் செயல்பட வேண்டும்" என்பது கூட்டாட்சித் தத்துவத்துக்குக் காட்டிய வழியாகும்.

**2. உச்சநீதிமன்றச் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் சமூகநீதியை வலியுறுத்திப் பேசி இருக்கிறார் மாண்பமை கவாய். "சமத்துவத்தை நிலைநாட்டவே இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இந்த இடஒதுக்கீடு, அனைவருக்கும் கிடைக்க வேண்டும். வாய்ப்புகள் கிடைக்காதவர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும்" என்று சொல்லி இருக்கிறார்.**

3. மரண தண்டனைக்கு எதிரான கருத்தை மாண்பமை கவாய் சொல்லி இருக்கிறார். "ஒரு குற்றத்துக்கு மரண தண்டனை மட்டுமே தீர்வாகுமா? ஆகாது. நான் எனது பணிக் காலத்தில் தூக்குத் தண்டனையை ஒருமுறைகூட உறுதி செய்யவில்லை. கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட பல்வேறு தீர்ப்புகளில் ஒருவரை தூக்கிலிடுவதை விட அவருக்கு பல ஆண்டு சிறை அல்லது சாகும் வரை சிறைத் தண்டனை வழங்கலாம்" என்று சொல்லி இருக்கிறார்.

4. சுதந்திரமான நீதித்துறையை வலியுறுத்தி இருக்கிறார். "நீதித்துறை மீது மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்றால் அது சுதந்திரமாக இருக்க வேண்டும். அது தொடர்ந்து நிலைநிறுத்தப்பட வேண்டும்" என்று சொல்லி இருக்கிறார்.

**5. நீதித்துறையா, நிர்வாகத்துறையா, நாடாளுமன்றமா? யார் உயர்ந்தவர்கள் என்ற கேள்வி எழுந்து வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் மட்டுமே உயர்ந்தது. மற்றவை அனைத்தும் அரசமைப்புச் சட்டத்துக்காகப் பணியாற்ற வேண்டும் - என்பது அவரது அழுத்தமான கருத்து ஆகும்.**

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த மாண்பமை கவாய் அவர்களின் சிந்தனைகளை உரியவர்கள் பின்பற்ற வேண்டும்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.11.2025) முகாம் அலுவலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் தலைசிறந்த வீரர், வீராங்கனைகளை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு விளையாட்டு மேம்பாட்டிற்கான சிறப்பு அங்கீகாரம் அளித்து FICCI (Federation of Indian Chambers of Commerce and Industry) வழங்கிய "இந்தியா ஸ்போர்ட்ஸ் அவார்ட்ஸ் 2025" விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

### மாவட்ட அமைச்சர்கள் - பொறுப்பு அமைச்சர்கள் ஆங்காங்கு மாவட்டங்களில் நிலைமையை கண்காணித்து வருகிறார்கள்

# புயலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

சென்னை, நவ.29-

தமிழ்நாட்டில் புயலை எதிர்கொள்ள அரசு தயாராக இருக்கிறது என்றும், மாவட்ட அமைச்சர்களும், பொறுப்பு அமைச்சர்களும் ஆங்காங்கே நிலைமையை கண்காணித்து வருகிறார்கள் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.11.2025) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்ட பின்பு, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

29.11.2025 மற்றும் 30.11.2025 ஆகிய தேதிகளில் தெற்கு பகுதிகளிலும், டெல்டா பகுதிகளிலும் கடுமையான மழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். ரெட் அலர்ட் கொடுத்திருக்கிறார்கள். ரெட் அலர்ட் விடுத்திருக்கும் மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக தொடர்பு கொண்டு ஆய்வு மேற்கொண்டோம். ஏற்கெனவே, நேற்றையதினம் இதுகுறித்து என்னுடைய தலைமையில், தலைமைச் செயலாளர் முன்னிலையில் உயர் அதிகாரிகள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கூட்டத்தை கூட்டி உரிய அறிவுரை வழங்கியிருக்கிறோம்.

**கண்காணிப்பு அலுவலர்கள் அனுப்பிவைப்பு!**

எல்லா மாவட்டங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்களை அனுப்பி வைத்திருக்கிறோம். அனைவரும் அவரவர்களுக்குரிய மாவட்டங்களுக்கு சென்றுவிட்டார்கள். ஏற்கெனவே, எந்தெந்த இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தந்த இடங்களில் கவனமாக இருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். மின் கம்பிகள் எங்கும் அறுந்து விழாமல் விபத்து ஏற்படாமல், கவனமாக கண்காணிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். எனவே, எச்சரிக்கை செய்யும் அந்த பணியைதான் இன்றைக்கு நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

**செய்தியாளர்:** சென்னைக்கு ஏதேனும் பாதிப்புகள் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களா? சென்னையில் எந்தமாதிரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றோம்? அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** சென்னையும் பாதிக்கப்படும். சென்னையிலும் அதிகம் மழை பெய்யும் என்று சொல்கிறார்கள்.

**முகாம்கள் - உணவுகள் வழங்க ஏற்பாடு!**

**செய்தியாளர்:** நேற்று பேசும்போது, ஏழைகள் அதிகளவில் பாதிக்கப்பட கூடாது நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பேசியிருந்தீர்கள். இதற்கான முகாம்கள், உணவுப்பொருட்கள் தயார் நிலை பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தேவையான இடங்களில் முகாம்களும், அங்கு உணவுகள் வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் திறந்துவிடும் நேரங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

**பொறுப்பு அமைச்சர்கள் கண்காணிக்கின்றனர்!**

**செய்தியாளர்:** பொறுப்பு அமைச்சர்கள் - கண்காணிப்பு அமைச்சர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனரா? அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** ஏற்கெனவே அந்தந்த மாவட்டங்களில் பொறுப்பு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களும் அதை கண்காணித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

**எதிர்க்கட்சித் தலைவர் வஞ்சிக்காமல் இருந்தால் போதும்!**

**செய்தியாளர்:** டெல்டா மாவட்ட மக்களை தமிழக அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லி வருகிறார். அதுபற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அவர் வஞ்சிக்காமல் இருந்தால் போதும். அதுதான் முக்கியம். அவர் சொல்லிக்கொண்டுதான் இருப்பார். அதுபோன்று எதுவும் கிடையாது. அவர் எப்போதும் அப்படிதான் சொல்லிக்கொண்டு இருப்பார். அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது.

**செய்தியாளர்:** புயலை எதிர்கொள்ள எல்லாவற்றிலும் தயாராக இருக்கிறதா? அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

**காணொலி வாயிலாக முதலமைச்சர் ஆய்வு!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.11.2025) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.



வங்கக் கடலில் உருவான டித்வா புயல் தற்சமயம் இலங்கையின் மேல் நிலை கொண்டுள்ளது. இது தொடர்ந்து வடக்கு-வடமேற்கு திசையிலே நகர்ந்து தமிழ்நாட்டின் கடலோரமாக வடக்கு நோக்கி நகரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் இன்று (29.11.2025) மற்றும் நாளை (30.11.2025) ஆகிய தினங்களில் தமிழ்நாட்டில் கடுமையான மழைபொழிவு ஏற்படக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே மாநில பேரிடர் மீட்பு படையின் 16 அணிகளும், தேசிய பேரிடர் மீட்பு படையின் 12 அணிகளும் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, சென்னை, வேலூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பேரிடர் சூழலை திறம்பட கையாளுவதற்காக, கூடுதலான தேசிய பேரிடர் மீட்பு படையை அண்டை மாநிலங்களில் இருந்து கொண்டு வருமாறும், தேவை ஏற்படின் இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் இந்திய கடலோர காவல் படை ஆகிய மத்திய படைகளை தயார் நிலையில் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தொலைதொடர்பு நிறுவனங்களுடனும், எண்ணெய் நிறுவனங்களுடனும் ஆயத்த நிலை குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (27.11.2025) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போது நிலவிவரும் வானிலை நிலவரம் குறித்தும், பேரிடர் மேலாண்மைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு முன்னெடுப்புகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் அவர்கள் இன்று சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்து 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக டித்வா புயல் காரணமாக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், அனைத்து துறையினரும் முறையான ஒருங்கிணைப்புடன் செயல்பட வேண்டும் என்றும், அனைத்து துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்கவும், மக்கள் பாதிக்கப்படாத வகையில் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கவும் அறிவுறுத்தினார். மேலும், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள கண்காணிப்பு அலுவலர்களை சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் தொடர்ந்து முகாமிட்டு ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

அத்துடன், முகாம்களில் மக்களுக்கு தேவையான பால் உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் எனறும், குடியிருப்பு பகுதியில் வெள்ளநீரை அகற்றிட தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும், புயல் காற்றினால் மின்கம்பங்கள் பாதிக்கப்பட்டால், அதனை சீர்செய்திட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார், எரிசக்தி துறை கூடுதல் தலைமைச் செயலாளர்மங்கத் ராம் சர்மா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் டாக்டர். கே.எஸ். பழனிசாமி, பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி. சிஜி தாமஸ் வைத்தியன், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.முத்துக்குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# புயல்: மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, நவ.29-

டித்வா புயல் பாதிப்புகளில் இருந்து மக்களைக் காக்க மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை மேற்கொண்டது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**டித்வா புயல் பாதிப்புகளில் இருந்து மக்களைக் காக்க 14 மாவட்ட ஆட்சியர்களுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறேன்.**

**16 SDRF படைகளும் 12 NDRF படைகளும் கடுமையான மழைப்பொழிவு ஏற்படக்கூடிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.**

**அனைத்துத் துறைகளும் முறையான திட்டமிடுதலோடு ஒருங்கிணைந்து செயல்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்திட வேண்டும்! பொதுமக்கள் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையினைப் பின்பற்றி, அவசியமின்றி வெளியில் வருவதைத் தவிர்த்து, பாதுகாப்பான இடங்களில் இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்